# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 7, 2024 Weekly E-paper ● December 7, 2024




## 16-வது நிதிக் குழு முன் மாநிலங்களும் அவை எதிர்கொள்ளும் சவால்களும்

மு.க.ஸ்டாலின்

## வரவேற்கத்தக்க தீர்ப்பு!

தலையங்கம்

## கருப்பின் இருப்பு குறையாது! காவிகளின் கனவு பலிக்காது!

காசு. நாகராசன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 7, 2024    Weekly E-paper ● December 7, 2024


# 16-வது நிதிக் குழு முன் மாநிலங்களும் அவை எதிர்கொள்ளும் சவால்களும்

மு.க.ஸ்டாலின்



பொருளாதார வல்லுநர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16-வது நிதிக்குழுவின்கூட்டம் தமிழகத்தில் நடைபெற்றது. உலகளாவிய மாற்றங்களால் உருவாகியுள்ள புதிய வாய்ப்புகள், இந்த நிதிக் குழு எடுக்க உள்ள முடிவுகள், நாட்டின் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான நிதிச் செயல்பாடுகளுக்கு வடிவம் கொடுப்பது மட்டுமின்றி, எதிர்வரும் காலங்களில் இந்தியா தேர்வு செய்யப்போகும் பொருளாதாரப் பாதையின் மீதும் தாக்கம் செலுத்தக் கூடியவையாகும்.

உலக அளவில் பல முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்து வரும் இவ்வேளையில், 16-வது நிதிக்குழு தனது பணியை மேற்கொண்டுள்ளது. தற்போது வளர்ந்து வரும் புதிய முறைகளான, நட்புறவு நாடுகளுக்கு வணிகச் செயல்பாடுகளை மாற்றுதல் மற்றும் உற்பத்தி மற்றும் முதலீடுகளை மீண்டும் சொந்த நாட்டில் தொடங்குதல் உள்ளிட்டவை சர்வதேச வணிகம் மற்றும் முதலீட்டு நடைமுறைகளை மறுகட்டமைப்பு செய்கின்றன. இந்த மாற்றங்கள் இந்தியா மற்றும் தமிழகத்துக்கு தனித்துவமான வாய்ப்புகளையும் வழங்குகின்றன. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள, மாநிலங்களுக்குச் சமமான மறுபங்கீடு மற்றும் தமிழகம் போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் வளர்ச்சியை ஊக்குவித்தல் உள்ளிட்ட சவால்கள் இந்த நிதிக்குழுவின் முன்னுள்ளது. கடந்த 1951-ம் ஆண்டு, முதல் நிதிக்குழு அமைக்கப்பட்டதிலிருந்து, தொடர்ந்து வந்த ஒவ்வொரு நிதிக்குழுவும், அந்தந்த காலத்தின் நிதிச் சிக்கல்களுக்கு ஏற்ப தங்களது அணுகுமுறையை மாற்றியமைத்துக் கொண்டன. ஒவ்வொரு நிதிக்குழுவும் செங்குத்துப் பகிர்வின் வழியாக மாநிலங்களுக்கான பகிர்வை அதிகரிப்பதன் மூலம் சமமான வளப்பங்கீட்டை அடையவும், கிடைமட்ட பகிர்வின் வழியாக குறைந்த வளர்ச்சி பெற்ற மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கவும் முயற்சி செய்துள்ளன.

ஆனால், அவர்களின் நோக்கங்கள் அரசின் செயல்பாடுகள், இடையில் பெரும் இடைவெளி இருந்தது. எனவேதான், நிதிப்பகிர்வு முறையில் புதிய மற்றும் நியாயமான அணுகுமுறையை நாங்கள் முன்வைக்கிறோம். உதாரணமாக, 15-வது நிதிக்குழு, மாநிலங்களுக்கு 41% வரிப்பகிர்வு அளிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆனால், முதல் 4 ஆண்டுகளுக்கு மத்திய அரசின் வருவா -யில் 33.16 சதவீதம் மட்டுமே பகிரப்பட்டது. வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை மத்திய அரசு உயர்த்தியதே பகிர்வில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்குக் கார ணமாகும்.

## மாநிலப் பகிர்வை உயர்த்துதல்

மாநிலங்கள் மக்களுக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும்போது, அவற்றுக்கான மத்திய நிதியும் அதற்கேற்ப உயர்த்தப்பட வேண்டும். மத்திய திட்டங்களுக்கான கூடுதல் நிதி மற்றும் மத்திய அரசின் குறைந்த நிதிப்பகிர்வு ஆகிய இரண்டும் மாநிலங்கள் மீதான வரிச்சுமைக்கு காரணமாகும்.

எனவேதான், மத்திய வரி வருவாயில் இருந்து மாநிலங்களுக்கு 50 சதவித வரிப்பகிர்வு வழங்கப்பட - வேண்டும் என கோருகிறோம். இது மாநிலங்கள் நிதி சுயாட்சியுடன் செயல்படவும், மக்களுக்கான திட்டங்களை அறிமுகப்படுத்தவும் உதவும்.

கடந்த 45 ஆண்டுகளாக, கிடைமட்ட வரிப்பகிர்வு முறையின் மூலம் பின்வளர்ச்சிக்குப் பெரிய அளவில்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

முன்பக்கத் தொடர்ச்சி...

உதவவில்லை. எனவே, குறைந்த தேசிய பொருளாதார வளங்களுடன், வளர்ச்சியில் பின்தங்கிய மாநிலங்களுக்கு பெரிய பங்கை வழங்குவதில், கவனம் செலுத்தப்போகிறோமா? அல்லது பெரிய அளவிலான தேசிய பொருளாதார வளங் களுடன், அனைவருக்கும் அதிகமான வளங்களைப் பகிர்ந்தளிக்கும் சமமான பங்கீட்டுக் கொள்கையை பின்பற்றுவ தில் கவனம் செலுத்தப் போகிறோமா? என்பதுதான் மிகப்பெரிய கேள்வி. இதற்கான விடை சிக்கலானது.

இருப்பினும் இதில் சமச்சீரான அணுகுமுறையே, வளர்ச்சியில் பின் தங்கிய மாநிலங்களுக்குத் தேவையான பகிர்வை அளிக்கவும், முன்னேற்றப் பாதையில் இருக்கும் மாநிலங்களின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கத் தேவையான வளங்களை பகிர்ந்தளிக்கவும் உதவும். வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு இதுபோன்ற வரிப்பகிர்வு முறையே அவசியம்.

இதற்கிடையில், தமிழகம் போன்ற வளர்ச்சியடைந்த மாநிலங்கள் மக்கள் தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற தனித்துவமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தேசிய சராசரியைவிட வயதானோர் எண்ணிக்கை அதிகரிப்பு, வயதானவர்களுக்கான ஆதரவு திட்டங்களுக்கான செலவுகள் அதிகரிக்கும் நிலையில், நுகர்வு அடிப்படையிலான வரி வருவாய் தொடர்ந்து குறைந்து வருகிறது. இதுபோன்ற மாநிலங்கள் வளர்ச்சியில் தேக்கமடையும், 'நடுத்தர வருமான மாநிலம்' எனும் பொறிக்குள் சிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம்.

## வேகமான நகரமயமாதல் சவால்

அதேபோல், தமிழகம் போன்ற மாநிலங்கள் நாட்டிலேயே வேகமாக நகரமய மாதல் அதிகரிக்கும் சவாலை எதிர் கொண்டுள்ளன. இதனால், 2031-ம் ஆண்டு, நகர்ப்புற மக்கள்தொகை 57.30 சதவீதம் என கணிக்கப்பட்டுள்ளது. இது அப்போதைய தேசிய சராசரியான 37.90 சதவீதத்தைவிட அதிகமாக இருக்கும். எனவே, எதிர்கால நகரமயமாதலுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவைப்படும் வளங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

அதேநேரம், நிதிக்குழுவின் பரிந்துரைகள் பொருளாதாரக் கணக்குகளுக்கு அப்பாற்பட்டது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். உற்பத்தியை ஊக்குவிப்பது, நகரமயமாதல் சவால்களை எதிர்கொள்வது அல்லது காலநிலை மாற்றத்தைக் கையாள்வது என எதுவாக இருப்பினும், நிதிக்குழுவின் பரிந்துரை கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், உலகின் முன்னணி பொருளாதார நாடுகள் வரிசையில் இந்தியாவை நிலைநிறுத்தத் தேவையான பாதையையும் தீர்மானிக்கிறது என்பது குறிப் பிடத்தக்கது.

நன்றி: இந்து தமிழ்திசை, 07.12.2024

# அண்ணல் அம்பேத்கருக்கு வீரவணக்கம்





கடந்த 05.12.2024 அன்று நடைபெற்ற பேரவைத் தோழர் மணி அவர்களின் இணையேற்பு வரவேற்பு நிகழ்வில் பேரவைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், மாநில சிறுபான்மை ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பேரவைத் தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## வரவேற்கத்தக்க தீர்ப்பு!

விருதுநகர் மாவட்டம் பனையடிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கம்மவார் சமூக நலச் சங்கத்தின் செயலாளர் மகாலட்சுமி என்பவர், இறுதி ஊர்வலத்தின்போது தங்களது தெருக்களைச் சிலர் பயன்படுத்தக் கூடாது என்றும், பொதுச் சாலையையோ வழக்கமான பாதையையோ அவர்கள் பயன்படுத்த உத்தரவிடக் கோரியும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் மனுவைச் சமர்ப்பித்திருந்தார்.

இதில் பின்வருமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. "இறுதி ஊர்வலத்தைத் தங்களது தெருக்கள் வழியாக நடத்தக் கூடாது என்று சொல்வது அரசமைப்புச் சட்டக்கூறு 15-க்கு எதிரானது. இறுதி ஊர்வலத்தின்போது ஊராட்சிக்குச் சொந்தமான தெருக்கள், சாலைகள் போன்றவற்றைச் ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்படுத்தலாம். தங்களது தெருக்களின் வழியாக இறுதி ஊர்வலம் நடத்துவதால் பொது அமைதி கெடுவதாக மனுதாரர் தெரிவித்திருப்பது ஏற்புடையதல்ல. தங்களது சங்க உறுப்பினர்களின் நலன் சார்ந்து செயல்படாமல் பாகுபாட்டைத் தூண்டிவிடும் இதுபோன்ற மனுக்கள் மூலம் தங்களைத் தரம் தாழ்த்திக் கொள்ளக் கூடாது. இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றால் அது கிராம மக்களின் நல்லிணக்கத்திற்கு எதிரானதாக ஆகிவிடும்" என்று தீர்ப்பளித்து மனுவைத் தள்ளுபடி செய்ததோடு மனுதாரருக்கு ரூ.25,000 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களை அனைவரும் பயன்படுத்துவதற்கான போராட்டம் நடத்தப்பட்டு நூறாண்டுகள் கடந்தும், வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் தங்கள் தெருக்களில் நுழையக் கூடாது என்று நீதிமன்றத்திற்குச் செல்லும் அவலமான சூழல் இன்னும் நிலவி வருகிறது. இது பெரியாரின் தேவையை இன்றும் வலியுறுத்துகிறது.

இதை ஒரு பிரச்சினையாக்கி நீதிமன்றத்திற்கே சென்றார்கள் என்றால், அந்த மனுதாரர் எந்த அளவிற்கு ஜாதி என்னும் மனநோயால் பாதிக்கப்பட்டிருப்பார். இதனை ஒரு வழக்காக அந்த வழக்கறிஞரும் எடுத்துக் கொண்டுள்ளாரே? அரசமைப்பையும் சேர்த்துக் கற்றவர்தானா அந்த வழக்கறிஞர்? இப்படி ஒரு வழக்கைத் தொடுப்பது அரசமைப்புச் சட்டத்திற்கும், ஏன் மனித மாண்பிற்குமே எதிரானது என்று அந்த வழக்கறிஞருக்குத் தெரியாதா? நீதிமன்றம் நியாயமாக இவ்வழக்கை எடுத்த வழக்கறிஞருக்கும் சேர்த்து அபராதம் விதித்திருக்க வேண்டும்.

எவ்வளவோ முற்போக்கான நிகழ்வுகளைத் தமிழ்நாடு சாதித்திருந்தாலும், இது போன்ற நிகழ்வுகள், பெரியாரிய இயக்கங்கள் இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டிய தேவையையே நினைவூட்டுகின்றன.

## பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 9.12.24 | திங்கள் காலை 11 மணி - ஜே ஜே கல்லூரி, புதுக்கோட்டை - கலைஞர் நூற்றாண்டு விழா! |
| 10.12.24 | செவ்வாய் மாலை 6 மணி - காரைக்குடி, ஜெகன் ஹோட்டல் அரங்கம் - நூல்கள் அறிமுகக் கூட்டம் |
| 11.12.24 | புதன் காலை 10 மணி - காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகம் - கலைஞர் நூற்றாண்டு விழா |
| 11.12.24 | புதன் - இரவு ஏழு மணி - திருவெறும்பூர் - திமுக பொதுக்கூட்டம் |
| 12.12.24 | வியாழன் மாலை 6.30 மணி - சென்னை, பெரியார் திடல் - நேருவின் உலக சரித்திரம் - 9 (தொடர் சொற்பொழிவு) |
| 14.12.24 | சனி இரவு 7 மணி - ஆலந்தூர் - திமுக பொதுக்கூட்டம் |
| 15.12.2024 | ஞாயிறு மாலை 5.30 மணி - கொளத்தூர் - ஜவகர் நகர் பொது நூலக வாசகர் வட்டம் |

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# கருப்பின் இருப்பு குறையாது! காவிகளின் கனவு பலிக்காது!

காசு. நாகராசன்



அவர்களால் ”உங்களுக்கெல்லாம் படிப்பு எதற்கு? எல்லோருக்கும் அவா அவா குடும்பத் தொழில் குலத் தொழில் ஒன்னு இருக்கோ இல்லையோ? ஒழுங்கா அதைக் கவனிங்க. இல்லேனா தர்மம் கெட்டுடும். என்று மிரட்டவும் முடியும். குலத்தொழிலை மறுக்கிறவனின் கட்டை விரலையோ தலையையோ அரசர்களின் தயவோடு மனுதர்மச் சட்டத்தைக் காட்டிக் காவு வாங்கவும் தெரியும்”.

அதெல்லாம் இப்போ நடக்குமா? மனுதர்மம், சனாதனம் எல்லாம் இப்ப எங்கே இருக்கு? இப்போ இருப்பதெல்லாம் அரசியல் சட்டம் தான். ஓ... அப்படியா ? இந்தியா விடுதலை பெற்று, 1950 இல் புதிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து, இந்தியா குடியரசாகி, வாக்குரிமை பெற்ற குடிமக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த அரசாங்கம் ஆட்சிக்கும் வந்தபிறகு, 1952 ஆம் ஆண்டில் ஒருநாள் சென்னை திருவான்மியூரில் நடந்த சலவைத் தொழிலாளர்கள் மாநாட்டில் அன்றைய சென்னை மாகாண முதல் மந்திரி ஸ்ரீ மான் ராஜகோபாலாச்சாரி கேட்டார், ”உங்களுக்கெல்லாம் ஒரு கைத்தொழில் இருக்கிற போது நீங்கள் ஏன் படிப்பு, உத்தியோகம் என்று வீணாக அலைகிறீர்கள்?” இந்தக் கேள்வியின் பின்னணியில் உள்ள சூழ்ச்சியை உடனடியாகப் புரிந்துகொண்டவர் பெரியார்தான். உடனடியாக எதிர்வினை ஆற்றினார். கண்டித்தார்.

ஆனாலும் ராஜகோபாலர் எதற்கும் அசரவில்லை. தான் திட்டமிட்டபடி 1953 ஆம் ஆண்டு முதல் பள்ளிகளில் ஒரு நேரம் படிப்பு இன்னொரு நேரம் அவனவன் அப்பன் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டியது என்று அமைச்சரவையைக் கூட்டாமல், யாரோடும் கலந்தாலோசனை செய்யாமல் அவசர அவசரமாக பத்திரிக்கைகளுக்குச் செய்தி அனுப்பி அரசாணையாக்கினார். குலக் கல்வித் திட்டத்தை. உடனடியாக ஆறாயிரம் பள்ளிக் கூடங்களை இழுத்து மூடினார். நீதிக்கட்சி ஆட்சியில் கிடைக்கப் பெற்ற கல்வி ஓடையை வர்ணாசிரம அணைபோட்டுத் தடுத்தார். அதாவது அரசியல் சட்டத்தை அப்படியே ஓரத்தில் தூக்கிப் போட்டு விட்டு மனுதர்மத்தை நிலைநாட்டினார் திருவாளர் ராஜகோபாலர். மூதறிஞர் என்றால் சும்மாவா?

இப்படித்தான் நடக்கும் என்பதை முன்னரே உணர்ந்திருந்த பெரியாரும் விடுவாரா இதை ? உடனடியாக களத்திற்கு வந்தார் பெரியார். குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் படையமைத்தார். நாள்தோறும் கூட்டங்கள், போராட்டங்கள் வெடித்தன. முடிவுக்கு வந்தது மூதறிஞர் ஆட்சி. 1954 ஆம் ஆண்டு பெரியார் அண்ணா ஆதரவோடு பச்சைத் தமிழர் காமராசர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தமிழ்நாட்டில் மீண்டும் கல்வி ஓடை பெருகியது.

1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டுப் பிள்ளைகளின் கல்வி நலனைக் கருதி இருமொழிச் சட்டத்தை நிறைவேற்றினார். 1969ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பேற்ற கலைஞர் புதுமுக வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி என்றார். தாலுக்கா என்கிற ஒவ்வொரு வட்டத்திற்கும் அரசு கலைக் கல்லூரிகள் தொடங்கினார். இட ஒதுக்கீடு அளவை அதிகரித்தார். அரசுப் பணியிடங்களை அதிகரித்து சாமானிய மக்களையும் அரசாங்கப் பணியாளர்களாக்கினார். போக்குவரத்தை அரசுடமையாக்கி சாதாரண ஒடுக்கப்பட்ட சமூகத்து இளைஞர்களை அரசுப் போக்குவரத்துப் பணியாளர்களாக்கினார்.

ஆனாலும் கல்வியறிவற்ற குலத் தொழில் மட்டுமே தெரிந்த அதாவது விஸ்வகர்மாக்கள் நிறைந்த வடநாட்டு அப்பாவிகளை ஏமாற்றி இந்திய ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தது வர்ணாசிரமம். 2014 ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தின் ஆட்சி வர்ணாசிரம சங் பரிவார் கும்பலின் அடியாட்கள் வசம் சென்றது. மருத்துவக் கல்விக்கு நீட் திணிக்கப்பட்டது. நுழைவுத்தேர்வுகளுக்குள் மாணவர்கள் திணிக்கப்பட்டனர். மீண்டும் ஏகலைவன்கள் சம்பூகன்கள் பலியிடப்பட்டனர்.

2019 ஆம் ஆண்டு துரோணாச்சாரி வகையறாவுக்கு அரசாங்க உத்தியோகங்களில் காலங்காலமாகக் கோலோட்சி வருகிற ஆரியப் பார்ப்பனர்களுக்கு கூடுதலாக 10% இடங்களைப் பட்டாப் போட்டுக் கொடுத்தார் நன்றிக்கடனாக மோடி. ஆனாலும் திருவாளர் மோடிக்கு ஒரு போதாமை இருந்தது. இன்னும் இன்னும் தன் எஜமானர்களுக்கு விசுவாசமாக ஏதாவது செய்தாக வேண்டும் என்று முடிவு செய்து 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாளில், ஆம்! தந்தை பெரியார் பிறந்த நாளில் , மீண்டும் குலத் தொழில் மனுதர்மம் என்கிற சட்டத்தை விஸ்வகர்மா என்ற பெயரில் நடைமுறைப்படுத்தி அக்ரஹாரங்களுக்கு ஆராதனை காட்டினார் மோடி.

இப்போது, பெரியார் இல்லை, அண்ணா இல்லை, கலைஞரும் இல்லை. எனவே 1953 ஆம் ஆண்டைப் போல இப்போது பெரிய அளவில் எதிர்ப்பு இருக்காது என்பது சங் பரிவார் கும்பலின் எண்ணம். ஆனால் மூன்று பேரின் மொத்த உருவமாய் நிற்கிற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திருவாளர் மோடிக்கு எழுதிய கடிதத்தில், பிறப்பின் அடிப்படையில் குலத் தொழிலை வலியுறுத்தி ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் உங்கள் விஸ்வகர்மா திட்டத்திற்கு தமிழ்நாட்டில் இடமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.

தமிழ்நாட்டு அரசும், சமூகநீதி இயக்கங்களும் விஸ்வகர்மாவை ஆழக் குழி தோண்டிப் புதைப்போம் தமிழ்நாட்டில். ஆனால், ஆண்ட பரம்பரைப் பெருமையில் மிதப்போர் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் குருடாக்கப்பட்டு ஜாதித் தொழிலுக்குள் தள்ளப்படுகிற ஆபத்தை உணர்ந்து அதைத் தடுத்திடும் முயற்சிக்கு உடனடியாக ஆதரவளிக்க வேண்டும். தமிழ்நாடு ஓரணியில் நின்று சனாதனத்தை வீழ்த்தி சமூகநீதியைப் பாதுகாக்கும் என்பதை டில்லியின் காதுகளில் அறைந்து சொல்ல வேண்டும்.

வடக்கிருந்து வீசி எறியப்படும் எலும்புத் துண்டுகளுக்காகக் குரைப்போரை அம்பலப்படுத்தி அப்புறப்படுத்துவோம்!

நம் நாளைய தலைமுறையின் சுயமரியாதை வாழ்வுக்கு உறுதியேற்போம்!! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian